CC.No.435/2022 (JM.No.II, DHARMAPURI.)

**13.03.2024**

**சாட்சிக்கு சத்தியப்பிரமானம் செய்து வைக்கப்பட்டது.**

**PW33: திரு. பஞ்சாக்சரம்**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது எண்.29/03, போஸ் தெரு, கிருஷ்ணமூர்த்தி நகர், கொடுங்கையூர், சென்னை 118 ல் வசித்து வருகிறேன். கடந்த 31.05.2023 ம் நாள் அன்று தடய அறிவியல் துறையில் துணை இயக்குநர் மற்றும் ஆவண நிபணராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 01.10.2014 ம் தேதியன்று தடய அறிவியல் துறையில் உதவி இயக்குநராக பணிபுரிந்தபோது நீதிமன்ற கடித எண்.1472/2014 நாள் 30.09.2014 கு.எண்.01/2014 வணிக குற்ற புலனாய்வு பிரிவு தருமபுரி அவர்களிடம் இருந்து சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.முருகேசன் மூலமாக நீதிமன்ற ஆவணங்கள் எங்கள் ஆய்வகத்தில் துணை இயக்குநர் அவர்களால் பெறப்பட்டது. அவ்வாறு பெறப்பட்ட சர்ச்சைக்குறிய நகை கடன் பதிவேட்டில் உள்ள கையொப்பங்களுக்கு Q1 முதல் Q 14 வரை மற்றும் Q16-Q 50 வரை குறியீடு செய்யப்பட்டது.

2) ஒப்புக்கொள்ளப்பட்ட 19.10.2012, 04.07.2014, 17.05.2012 நாளிட்ட ஆவணங்களில் உள்ள எஸ்.கலைசெல்வியின் கையொப்பங்களுக்கு A1-A3 வரை குறியீடு செய்யப்பட்டது. 27.12.2013 ம் நாளிட்ட ஆவணங்களில் உள்ள சாந்தி அவர்களின் கையொப்பங்களுக்கு A4-A6 வரை குறியீடு செய்யப்பட்டது. 28.06.2010, 30.07.2012 நாளிட்ட ஆவணங்களில் உள்ள தேவராஜ் அவர்களின் கையொப்பங்களுக்கு Q7-Q 11 வரை குறியீடு செய்யப்பட்டது. 04.12.2011, 04.11.2011, 04.10.2011 நாளிட்ட ஆவணங்களில் உள்ள எம்.ரசியா அவர்களின் கையொப்பங்களுக்கு A12-A14 வரை குறியீடு செய்யப்பட்டது. 24.05.2013 ம் நாளிட்ட ஆவணங்களில் உள்ள எஸ்.இந்திரா அவர்களின் கையொப்பங்களுக்கு A15-A17 வரை குறியீடு செய்யப்பட்டது.

3) 10.08.2011, 10.08.2012, 15.09.2012, 11.09.2013 நாளிட்ட ஆவணங்களில் உள்ள பி.சேகர் அவர்களின் கையொப்பங்களுக்கு A18-A20 வரை குறியீடு செய்யப்பட்டது.

**18.09.2014 ம் நாளிட்ட மூன்று வெள்ளை தாள்களில் உள்ள கலைசெல்வி அவர்களின் மாதிரி கையொப்பங்களுக்கு S1-S12 வரை குறியீடு செய்யப்பட்டது. அந்த கையொப்பம் அ.சா.ஆ.78** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **18.09.2014 ம் நாளிட்ட மூன்று வெள்ளை தாள்களில் உள்ள சாந்தி அவர்களின் மாதிரி கையொப்பங்களுக்கு S13-S24 வரை குறியீடு செய்யப்பட்டது. அந்த கையொப்பம் அ.சா.ஆ.79** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **18.09.2014 ம் நாளிட்ட மூன்று வெள்ளை தாள்களில் உள்ள மற்றொரு சாந்தி அவர்களின் மாதிரி கையொப்பங்களுக்கு S25-S36 வரை குறியீடு செய்யப்பட்டது. அந்த கையொப்பம் அ.சா.ஆ.80** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **18.09.2014 ம் நாளிட்ட மூன்று வெள்ளை தாள்களில் உள்ள தேவராஜ் அவர்களின் மாதிரி கையொப்பங்களுக்கு S37-S48 வரை குறியீடு செய்யப்பட்டது. அந்த கையொப்பம் அ.சா.ஆ.81** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **18.09.2014 ம் நாளிட்ட மூன்று வெள்ளை தாள்களில் உள்ள இரஷ்யா அவர்களின் மாதிரி கையொப்பங்களுக்கு S49-S60 வரை குறியீடு செய்யப்பட்டது. அந்த கையொப்பம் அ.சா.ஆ.82** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) **18.09.2014 ம் நாளிட்ட மூன்று வெள்ளை தாள்களில் உள்ள இந்திரா அவர்களின் மாதிரி கையொப்பங்களுக்கு S61-S72 வரை குறியீடு செய்யப்பட்டது. அந்த கையொப்பம் அ.சா.ஆ.83** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **18.09.2014 ம் நாளிட்ட மூன்று வெள்ளை தாள்களில் உள்ள பி.சேகர் அவர்களின் மாதிரி கையொப்பங்களுக்கு S73-S84 வரை குறியீடு செய்யப்பட்டது. அந்த கையொப்பம் அ.சா.ஆ.84** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **18.09.2014 ம் நாளிட்ட 117 வெள்ளை தாள்களில் உள்ள டி.ஜெயந்தி அவர்களின் கையொப்பங்களுக்கு S85-S1254 வரை குறியீடு செய்யப்பட்டது. அந்த கையொப்பம் அ.சா.ஆ.85** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **18.09.2014 ம் நாளிட்ட 116 வெள்ளை தாள்களில் உள்ள முருகன் அவர்களின் கையொப்பங்களுக்கு S1255- S2414 வரை குறியீடு செய்யப்பட்டது. அந்த கையொப்பம் அ.சா.ஆ.86** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **18.09.2014 ம் நாளிட்ட 86 வெள்ளை தாள்களில் உள்ள சுரேஷ் என்ற சாமியாச்சாரி அவர்களின் கையொப்பங்களுக்கு S2415- S3274 வரை குறியீடு செய்யப்பட்டது. அந்த கையொப்பம் அ.சா.ஆ.87** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) ஒப்புக்கொள்ளப்பட்ட 19.10.2012, 04.07.2014, 17.05.2012 நாளிட்ட ஆவணங்களில்

உள்ள எஸ்.கலைசெல்வியின் கையொப்பங்களுக்கு A1-A3 வரை குறியீடு செய்யப்பட்டது. **நகை கடன் பேரடு தொகுதி கடன் எண்.2230 – 2429 வரை உள்ளதில் பக்கம் எண்.47 ல் உள்ள A1 என்று குறியீடு செய்யப்பட்ட கலைசெல்வியின் கையொப்பம் அ.சா.ஆ.88** ஆகும். 04.07.2014 ம் தேதியிட்ட ரசீதில் உள்ள **A2 என்று குறியீடு செய்யப்பட்ட கலைசெல்வியின் கையொப்பம் அ.சா.ஆ.89** ஆகும். 17.05.2012 ம் தேதியிட்ட ரசீதில் உள்ள **A3 என்று குறியீடு செய்யப்பட்ட கலைசெல்வியின் கையொப்பம் அ.சா.ஆ.90** ஆகும். **நகை கடன் பேரடு தொகுதி 3 பக்கம் எண்.18 A4 என்று குறியீடு செய்யப்பட்ட சாந்தியின் கையொப்பம் அ.சா.ஆ.91** ஆகும். A5-A6 **என்று குறியீடு செய்யப்பட்ட சாந்தியின் கையொப்பம் அ.சா.ஆ.92** ஆகும். 28.06.2010, 30.07.2012 நாளிட்ட ஆவணங்களில் உள்ள தேவராஜ் அவர்களின் கையொப்பங்களுக்கு A7-A 11 வரை குறியீடு செய்யப்பட்டது. **அந்த கையொப்பம் அ.சா.ஆ.93** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.12.2011, 04.11.2011, 04.10.2011 நாளிட்ட ஆவணங்களில் உள்ள எம்.ரசியா அவர்களின் கையொப்பங்களுக்கு A12-A14 வரை குறியீடு செய்யப்பட்டது. **அந்த கையொப்பம் அ.சா.ஆ.94** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **நகை கடன் பேரேடு தொகுதி 7 பக்கம் எண்.63 ல் உள்ள A15 இந்திராவின் கையொப்பம் அ.சா.ஆ.95** ஆகும். **நகை கடன் இருப்பு பதிவேடு பக்கம் எண்.145 உள்ள A16 ஆக குறியீடு செய்யப்பட்ட இந்திராவின் கையொப்பம் அ.சா.ஆ.96** ஆகும். நகை கடன் அட்டையில் **A17 ஆக குறியீடு செய்யப்பட்ட இந்திராவின் கையொப்பம் அ.சா.ஆ.97** ஆகும்.

**10.08.2011, 10.08.2012, 15.09.2012, 11.09.2013 நாளிட்ட ஆவணங்களில் உள்ள பி.சேகர் அவர்களின் கையொப்பங்களுக்கு A18-A20 வரை குறியீடு செய்யப்பட்டது. அந்த கையொப்பம் அ.சா.ஆ.98** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கையொப்பங்கள் பிரவேச புத்தகத்தில் தொகுதி 16 பக்கம் எண்.33 ல் உள்ளது. **நகை கடன் பேரேடு தொகுதி 2 ல் உள்ள q1-q5, q16, 19, 20, 21, 22 ஆகிய 10 கையொப்பங்கள் அ.சா.ஆ.99** ஆகும். **நகை கடன் பேரேடு தொகுதி 6 ல் உள்ள q11-14, q45, 46, 47, 48 ஆகிய 8 கையொப்பங்கள் அ.சா.ஆ.100** ஆகும். **நகை கடன் பேரேடு தொகுதி 4 ல் உள்ள q40-44 வரை உள்ள 5 கையொப்பங்கள் அ.சா.ஆ.101** ஆகும். **நகை கடன் பேரேடு தொகுதி 7 ல் உள்ள q49, q50 ஆகிய 2 கையொப்பங்கள் அ.சா.ஆ.102** ஆகும். **நகை கடன் பேரேடு தொகுதி 3 ல் உள்ள q23, 24, 25, q6-9, 27, 26, 28, 10, 29, 30-36, 37-39, 17 மற்றும் 18 ஆகிய 24 கையொப்பங்கள் அ.சா.ஆ.103** ஆகும். மேற்கண்டவாறு குறியீடு செய்யப்பட்ட

கையொப்பங்களை கவனமாக ஆய்வு செய்ததில் A1-A3 வரை மற்றும் ள S1-S12 வரை கையொப்பம் இட்ட நபர் சர்ச்சைக்குரிய Q1 கையொப்பத்தை போட்டுள்ளார் எனவும், S13-S24 வரை கையொப்பம் இட்ட நபர் சர்ச்சைக்குரிய Q2 கையொப்பத்தை போடவில்லை எனவும், A4-A6 வரை, S25-36 வரை கையொப்பம் இட்ட நபர் சர்ச்சைக்குரிய Q3, 4 மற்றும் 14 கையொப்பத்தை போடவில்லை எனவும், A7-A11 வரை, S37-48 வரை கையொப்பம் இட்ட நபர் சர்ச்சைக்குரிய Q5 கையொப்பத்தை போடவில்லை எனவும், A12-A14 வரை, S49-60 வரை கையொப்பம் இட்ட நபர் சர்ச்சைக்குரிய Q6 கையொப்பத்தை போடவில்லை எனவும், A15-A17 வரை, S61-72 வரை கையொப்பம் இட்ட நபர் சர்ச்சைக்குரிய Q7-10, 12, 13 கையொப்பத்தை போடவில்லை எனவும், A18-A20 வரை, S73-84 வரை கையொப்பம் இட்ட நபர் சர்ச்சைக்குரிய Q11 கையொப்பத்தை போடவில்லை எனவும், S1255-2416 வரை கையொப்பம் இட்ட நபர் சர்ச்சைக்குரிய Q2, 5, 6, 11, 16, 19-21, 23, 24, 27-30, 32, 34 மற்றும் 50 கையொப்பத்தை போட்டுள்ளார் எனவும், S2415-3422 வரை கையொப்பம் இட்ட நபர் சர்ச்சைக்குரிய Q7- 10, 12, 13, 17, 18, 40, 42, 43 மற்றும் 45 கையொப்பத்தை போட்டுள்ளார் எனவும் அறிக்கை அளிக்கப்பட்டது. மேலும், ஆய்வுக்கு அனுப்பப்பட்ட ஆவணங்களை வைத்து ஒரு சில கையொப்பங்களுக்கு கருத்துரை வழங்கவில்லை எனவும் அறிக்கைஅனுப்பப்பட்டது. மேற்கண்ட அறிக்கைக்கு எங்கள் ஆவண எண் 257/2014 நாள் 07.01.2015 என்று குறியீடு செய்யப்பட்டது. மேற்கண்ட அறிக்கை காரணத்தால் ஆவணங்கள் அனைத்தும் 22.01.2015 அன்று அதே சிறப்பு காவல் ஆய்வாளர் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. **நான் வழங்கி கடிதத்துடன் கூடிய ஆய்வறிக்கை அ.சா.ஆ.104** ஆகும்.

**1-2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) S85-S294 வரையுள்ள கலைசெல்வி, சாந்தி, மற்றொரு சாந்தி, தேவராஜ், ரஷ்யா, இந்திரா, சேகர் ஆகியோர்களின் மாதிரி கையொப்பம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தால் பெறப்பட்டு அனுப்பபட்டது என்றால் சரிதான். S295-1254 வரை 1 ம் எதிரி ஜெயந்தி என்பவரிடம் மாதிரி கையொப்பம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தால் பெறப்பட்டு அனுப்பபட்டது என்றால் சரிதான். S85-S294, S295-1254 வரை உள்ள கையொப்பமும் சர்ச்சைக்குறிய கையெழுத்துடன் ஒத்துவரவில்லை என்றால் சரிதான். S1255-2414 வரை உள்ள கையெழுத்து 2 ம் எதிரி முருகனிடம் இருந்து

பெறப்பட்ட கையெழுத்துடன் ஒத்துப்போவதாக அறிக்கை வழங்கியுள்ளேன், Q2, 5, 6, 11, 19-21, 23, 24, 25-30, 32, 34, 50 கையொங்களுடன் ஒத்துப்போகவில்லை என்று அறிக்கை அளித்தேன்.

2) அதை தவிர மற்ற கையொப்பங்கள் அவருக்கு ஒத்துப்போகவில்லை என்றால் சரிதான்.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3 ம் எதிரி தரப்பிற்கு இந்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளிக்கப்பட்டது. வாய்ப்பளித்தும் போதிய காரணம் எதுவும் இன்றி குறுக்கு விசாரணை செய்யவில்லை. எனவே, கு.வி.மு.ச பிரிவு 309 (c) ன் படி குறுக்கு விசாரணை முடித்து வைத்து முதல் விசாரணை சாட்சியம் ஏற்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது.